# March 19, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. நாடு முழுவதும் 100 தொழில் பூங்காக்களை மேம்படுத்த, ரூ.33,660 கோடி ஒதுக்கீட்டுடன் கூடிய பாரத தொழில் மேம்பாட்டுத் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. தில்லியில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டது. அமைச்சரவை கூட்டத்துக்குப் பிறகு இது குறித்து மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் செய்தியாளர்களிடம் கூறியதா வது:

(i) ரூ.33,660 கோடி பாரத தொழில் மேம்பாட்டு திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. நாட்டின் உற்பத்தித் திறனை ஊக்குவித்து உலகத் தரத்திலான தொழிலக உள்கட்டமைப்பை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

(ii) தகவல் தொடர்பு தொழில்நுட்ப வசதி, உட்புறச் சாலைகள், கீழ்தள வாகன நிறுத்தம் உள்ளிட்ட வசதிகள், கழிவுநீர் கால்வாய் வசதிகள், நீர் சுத்திகரிப்பு வசதிகள், சோதனைக் கூடங்கள், கிடங்குகள், தொழிலாளர்களுக்கான வீடுகள் என உடனடியாக தொழிலைத் தொடங்குவதற்கான அனைத்து வசதிகளும் இடம்பெற்றிருக்கும் வகையில் இந்தத் தொழில் பூங்காக்கள் அமைக்கப்படும்.

(iii) இத்திட்டத்தின் கீழ், 100 ஏக்கர் முதல் 1,000 ஏக்கர் நிலப்பரப்பு வரையிலான தொழில் பூங்காக்களை மேம்படுத்த நிதி உதவி அளிக்கப்படும். ஏக்கருக்கு ரூ.1 கோடி வீதம் நிதியுதவி அளிக்கப்படும். இத் திட்டம் 15 லட்சம் நேரடி வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(iv) உற்பத்தி நிறுவனங்கள், குறு-சிறு-நடுத்தர நிறுவனங்கள், புத்தாக்க நிறுவனங்கள், உலகளாவிய முதலீட்டாளர்களுக்கும் இத்திட்டம் நேரடிப் பலன்களை அளிக்கும்.

(v) தேசிய தொழில் வழித்தட மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், தொழில்துறை சீர்மிகு நகரங்கள் மேம்படுத்தும் திட்டம் வெற்றி பெற்றதன் அடிப்படையில், பாரத தொழில் மேம்பாட்டுத் திட்டமும் மாநில அரசுகள் மற்றும் தனியார் துறை பங்களிப்புடன் நடை முறைப்படுத்தப்படும் என்றார்.

(vi) பருத்தி கொள்முதலுக்கு...

- இந்திய பருத்தி கழகத்தின் (சிசிஐ) கொள்முதல் நடவடிக்கைகளுக்கு ரூ.1,718.56 கோடி ஒதுக்கீடு செய்ய மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.
- விவசாயிகள் நலனை மேம்படுத்தவும், தற்சார்பு இந்தியா இலக்கை முன்னெடுத்துச் செல்லும் நோக்கிலும் இந்திய பருத்தி கழகத்துக்கு இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அரசு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

(vii) உ.பி.யில் தேசிய நெடுஞ்சா லையை தரம் உயர்த்த...

- உத்தர பிரதேச மாநிலத்தில் பாராபங்கி முதல் பஹாராய்ச் வரையிலான தேசிய நெடுஞ்சாலை 927-ஐ4 வழிப்பாதையாக தரம் உயர்த்தும் ரூ.6,969 கோடி திட்டத்துக்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

(viii) சிறிய நீர் மின் உற்பத்தித் திட்டங்கள் :-

- ரூ.2,585 கோடி ஒதுக்கீட்டில் சிறிய அளவிலான நீர் மின் உற்பத்தித் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.
- இது குறித்து மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறுகையில், '1,500 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறன் மேம்பாட்டை வஊக்குவிக்கும் நோக்கில், இத்திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அணைகள் எதுவும் கட்டாமலும், மக்களை இடமாற்றம் செய்யாமலும், ஏற்கெனவே பாய்ந்து கொண்டிருக்கும் ஆற்றில் இத்தகைய சிறிய அளவிலான நீர் மின் உற்பத்தி மேற்கொள்வதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இத்திட்டம் வரும் 2030-31-ஆம் ஆண்டு வரை 5 ஆண்டு காலத்துக்கு நடைமுறைப்படுத்தப்படும். இந்த நீர் மின் உற்பத்தித் திட்டம் சுமார் ரூ.15,000 கோடி முதலீட்டை ஈர்க்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- இத் திட்டத்தின் கீழ் 1 மெகாவாட் முதல் 25 மெகாவாட் வரையிலான திறனுடன் கூடிய நீர் மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்க மத்திய அரசு நிதி ஆதரவு அளிக்கும். வடகிழக்கு மாநிலங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் ஒரு மெகாவாட்டுக்கு ரூ.3.6 கோடி அல்லது திட்ட மதிப்பில் 30 சதவீத நிதியை மத்திய அரசு அளிக்கும். பிற மாநிலங்களுக்கு ஒரு மெகாவாட் திறனுக்கு ரூ.2.4 கோடி அல்லது திட்டமதிப்பில் 20 சதவீதத் தொகையை மத்திய அரசு வழங்கும்.
- நாடு முழுவதும் மொத்தம் 21,000 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திறனுடன் இதுபோன்ற சிறிய நீர் மின் திட்டங்களை செயல்படுத்துவதற்கான 7,133 இடங்கள் உள்ளன. தற்போதைய நிலையில் 1,196 இடங்களில் சுமார் 5,100 மெகாவாட் உற்பத்தி திறனுடன் சிறிய நீர் மின் உற்பத்தி திட்டங்கள் செயல்பாட்டில் உள்ளன என்றார்.

2. மத்திய ஆப்பிரிக்க நாடான காங்கோ குடியரசில் அண்மையில் நடைபெற்ற அதிபர் தேர்தலில், தற்போதைய அதிபர் டெனிஸ் சசோ நுகுய்சோ 94.82 சதவீத வாக்குகளைப் பெற்று அமோக வெற்றி பெற்றுள்ளார்.

(i) 1979-ஆம் ஆண்டு முதன்முதலில் ஆட்சிக்கட்டிலில் அமர்ந்த சசோ (82), சுமார் 42 ஆண்டுகளாக அந்நாட்டை ஆட்சி செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

(ii) களத்தில் இருந்த 2 வேட்பாளர் ஒரு சதவீத வாக்குகளையும், மற்ற 4 பேர் ஒரு சதவீதத்துக்கும் குறைந்த வாக்குகளையும் பெற்றனர்.

(iii) எண்ணெய் வளம் மிக்க நாடாக இருந்தாலும், காங்கோ குடியரசின் பாதிக்கும் மேற்பட்ட மக்கள் அடிப்படை வசதிகளின்றி வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ளதாக உலக வங்கி புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

3. அமெரிக்கா செல்லும் சில வெளிநாட்டுப் பயணிகள் 15,000 டாலர் (சுமார் ரூ.14 லட்சம்) வரை பிணைத்தொகை செலுத்தும் நடைமுறை மோரீஷஸ் உள்பட மேலும் 12 நாடுகளுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

(i) விசாக் காலத்தை முடித்த பின்னரும் சட்டவிரோதமாக அமெரிக்காவில் தங்குவதைத் தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது இப்பட்டியலில் உள்ள மொத்த நாடுகளின் எண்ணிக்கை 50-ஆக அதிகரித்துள்ளது. வங்கதேசம், பூடான், நேபாளம் ஆகிய நமது அண்டை நாடுகளும் இப்பட்டியலில் உள்ளன.

(ii) அதேபோல், அமெரிக்காவில் சட்டவிரோதமாகத் தங்கியுள்ள வெளிநாட்டினர், தாமாக முன்வந்து வெளியேறினால் 2,600 டாலர் ஊக்கத்தொகை மற்றும் இலவச விமானப் பயணச் சீட்டு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

4. 16-ஆவது உலகக் கோப்பை ஹாக்கி போட்டி, நெதர்லாந்து மற்றும் பெல்ஜியத்தில் ஆகஸ்ட் 15 முதல் 30 வரை நடைபெறவுள்ளது. கூட்டமைப்புகளில் இருந்து மொத்தம் 16 அணிகள் இதில் பங்கேற்கின்றன. ஆடவர் உலகக் கோப்பை ஹாக்கி போட்டியில், இந்தியா - பாகிஸ்தான் மோதல் உறுதி செய்யப்பட்டுள்ளது. இரு அணிகளுமே குரூப் 'டி'-இல் சேர்க் கப்பட்டுள்ளன.

5. மேற்காசிய போர் நிலவரத்துக்கு இடையே, பிரச்னைக்குரிய ஹோர்முஸ் நீரி ணையைக் கடந்து மேலும் ஒரு கச்சா எண்ணெய் கப்பல் பாதுகாப்பாக இந்தியா வந்து சேர்ந்துள்ளது.

(i) ஜக் லாட்கி என்ற இந்திய கொடி பொருத்திய இந்தக் கப்பல், ஐக்கிய அரபு அமீரகத்தின் ஃபுஜைரா துறைமுகத்திலிருந்து சுமார் 80,886 டன் கச்சா எண்ணெய்யை ஏற்றிக்கொண்டு, குஜராத்தின் முந்த்ரா துறைமுகத்துக்கு வந்து சேர்ந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

(ii) முன்னதாக, ஏதென்ஸின் ஷெங்லாங் கப்பல் நிறுவனத்துக்குச் சொந்தமான லைபீரிய கொடி பொருத்திய ஸெங்லாங் சூஸ்மேக்ஸ்' என்ற கப்பல் சவூதி அரேபியாவின் ராஸ் டனூரா துறை முகத்தில் 1.35 லட்சம் மெட்ரிக் டன் கச்சா எண்ணெய்யை ஏற்றிக் கொண்டு கடந்த மார்ச் 11-ஆம் தேதிமும்பை துறைமுகத்துக்கு வந்தது. போருக்குப் பிறகு இந்தியா வந்த முதல் கச்சா எண்ணெய் கப்பல் இதுவாகும்.

(iii) அதன் பிறகு, சமையல் எரிவாயு (எல்பிஜி) ஏற்றிக்கொண்டு 'ஷிவாலிக் என்ற கப்பல் கடந்த திங்கள் கிழையும், நந்தா தேவி என்ற கப்பல் கடந்த செவ்வாய்க்கிழமையும் ஹோர்முஸ் நீரிணையைக் கடந்து குஜராத் துறைமுகங்களுக்கு வந்து சேர்ந்தன. இந்த இரண்டு கப்பல்களிலும் சுமார் 92,712 மெட்ரிக்டன் சமையல் எரிவாயு ஏற்றி வரப்பட்டது.

(iv) தற்போது 80,886 டன் கச்சா எண்ணெய்யுடன் மேலும் ஒரு கப்பல் இந்தியா வந்து சேர்ந்துள்ளது. இதுகுறித்து மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சக அதிகாரிகள் கூறியதாவது:

- மேற்காசிய போர் காரணமாக, 28 இந்திய சரக்கு கப்பல்கள் ஹோர்முஸ் நீரிணையில் மேற்கொண்டு பயணிக்க முடியாமல் சிக்கின. இவற்றில் 24 கப்பல்கள் அந்த நீரிணையின் மேற்கு பகுதியிலும், 4 கப்பல்கள் கிழக்கு பகுதியிலும் சிக்கியிருந்தன. அதைத் தொடர்ந்து, ஈரானுடன் இந்தியா தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தியது.
- அதன் பலனாக, இரண்டு பகு திகளிலும் தலா 2 கப்பல்கள் என மொத்தம் 4 கப்பல்கள் ஹோர்முஸ் நீரிணையைக் கடந்து பாதுகாப்பாக பயணத்தை மேற்கொண்டுள்ளன. தற்போது, ஹோர்முஸ் நீரிணையின் மேற்கு பகுதியில் 22 கப்பல்களும், கிழக்குப் பகுதியில் 2 கப்பல்களும் நிற்கின்றன.
- இவற்றில், மேற்கு பகுதியில் நிற்கும் இந்திய கொடி பொருத்திய 22 கப்பல்களில் 6 கப்பல்களில் சமையல் எரிவாயும் (எல்பிஜி) ஒன்றில் திரவ இயற்கை எரிவாயுவும் (எல்எனஜி), மற்றொன்றில் ரசாயனங்களும் உள்ளன. இவை தவிர, ஒரு தூர்வாரும் கப்பலும், ஒரு காலி சரக்கு கப்பலும், 3 பராமரிப்பு கப்பல்களும் இவற்றில் அடங்கும் என்றார்.

6. திருடப்பட்ட பொருளடக்கங்களை யிட்ட 3,142 டெலிகிராம் சேனல்கள், 800 வலைதளங்கள் முடக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக மக்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு மத்திய செய்தி மற்றும் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் எல். முருகன் புதன்கிழமை அளித்த பதில்:

(i) திரைப்படங்கள் திருட்டுத் தனமாகப் படம் பிடிக்கப்படுவதைத் தடுப்பதற்கான சட்ட வழிமுறைகள், ஒளிப்பதிவு திருத்தச் சட்டம் 2023-இன் 6ஏஏ, 6ஏபி ஆகிய பிரிவுகளின் கீழ் வலுப்படுத்தப்பட்டுள்ளன. அந்தப் பிரிவுகள் திரைப்படங்களை அனுமதியின்றி படம் பிடித்து பகிரப்படுவதைத் தடை செய்கிறது.

(ii) இந்தப் பிரிவுகளை யாராவது மீறினால், அவருக்கு அந்தச் சட்டத்தின் 7(1ஏ) பிரிவின் கீழ், குறைந்தபட்சம் 3 மாதங்கள் சிறைத்தண்டனையுடன் ரூ.3 லட்சம் அபராதமும் விதிக்கக்கப்படும். இந்தச் சிறைத் தண்டனையை 3 ஆண்டுகள் வரை நீட்டித்து, திரைப்பட தயாரிப்பின் மொத்த செலவில் 5 சதவீதத்தை அபராதமாக விதிக்க முடியும்.

(iii) இந்நிலையில், ஓடிடி தளங்கள், தயாரிப்பாளர்கள் உள்ளிட்டோருக்குச் சொந்தமான அல்லது உரிமம் பெற்ற பொருளடக்கங்களை, அவர்களின் அனுமதியின்றி பதிப்புரிமை சட்டம் 1957-ஐ மீறி வெளியிட்ட 3,142 சேனல்களை முடக்குமாறு தகவல் தொழில் நுட்பச் சட்டப் பிரிவு 79(3)(பி)- இன் கீழ் டெலிகிராம் நிறுவனத்துக்கு கடந்த மார்ச் 11-ஆம் தேதி தெரியப்படுத்தப்பட்டது. இதே காரணத்துக்காக சுமார் 800 வலைதளங்கள் இணையதள சேவை நிறுவனங்கள் மூலம் முடக்கப்பட்டன.

(iv) தனியார் தொலைக்காட்சி சேனல்களில் ஒளிபரப்பப்படும் அனைத்து விளம்பரங்களும் கேபிள் தொலைக்காட்சி நெட்வர்க் ஒழுங்காற்றுச் சட்டம் 1995-இன் கீழ் தெரிவிக்கப்பட்டுள்ள விளம்பர விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

(v) நிகழ்ச்சி விதிமுறை மற்றும் விளம்பர விதிமுறை மீறப்பட்டதாக எழும் புகார்களை விசாரிக்க, துறைகளுக்கு இடையிலான குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது என்று தெரிவித்தார்.

7. நாட்டில் புதிதாக இரண்டு யுரேனியம் சுரங்கத் திட்டங்களுக்கு விரைவில் ஒப்புதல் அளிக்கப்பட இருப்பதாக மத்திய அணுசக்தி துறை இணையமைச்சர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக மக்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் எழுத்துபூர்வமாக புதன்கிழமை அளித்த பதில்:

(i) ராஜஸ்தானின் சிகர் மாவட்டம், சத்தீஸ்கரின் ஜஜ்வால் மாவட்டத்தில் நாள்தோறும் 2,500 டன்னை கையாளும் திறன்கொண்ட யுரேனியம் சுரங்க நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன. அதற்கான சட்டபூர்வ ஒப்புதல்களைப் பெற வேண்டிய நடைமுறை பல்வேறு கட்டங்களாக நடைபெற்று வருகின்றன.

(ii) யுரேனியத்தை அகழ்ந்தெடுப்பதற்கான உள்நாட்டு திறனை அதிகரிக்கும் முன்னெடுப்புகளை அணுசக்தி துறையின் கீழ் செயல்படும் பொதுத் துறை நிறுவனமான யுரேனியம் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா (யுசிஐஎல்) மேற்கொண்டு வருகிறது. 2047-க்குள் இந்தியா வளர்ச்சியடைந்த பாரதமாகும் நோக்கில், புதிய யுரேனியம் சுரங்கத் திட்டங்களுக்கு யுசிஐஎல் திட்டமிட்டு வருகிறது என்றார்.

(iii) ஏற்கெனவே ஆந்திரம் மற்றும் ஜார்க்கண்ட் மாநிலங்களில் யுரேனியம் சுரங்கங்களை யுசிஐஎல் கையாண்டு வருகிறது. அணு உலைகளில் யுரேனியம் மூலம் மின்சாரம் தயாரிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

8. உருவாகிவரும் "எல் நினோ" வானிலை அச்சுறுத்தல் மற்றும் இந்தியப் பொருளாதாரத்தில் அதன் சாத்தியமான தாக்கம் குறித்த பகுப்பாய்வு :-

(i) தற்போதைய முன்னறிவிப்பு மற்றும் உருவாகிவரும் அச்சுறுத்தல் :-

- லா நினாவின் வலு குறைதல்: பொதுவாக தெற்காசியாவிற்கு நல்ல மழையைக் கொண்டுவரும் "லா நினா" நிலை, தற்போது வலுவிழந்து வருவதாக உலக வானிலை அமைப்பின் மார்ச் மாத அறிக்கை தெரிவிக்கிறது.
- உயரும் கடல் வெப்பநிலை: லா நினா மங்குவதால், கடல் மேற்பரப்பு வெப்பநிலை உயர்ந்து, "எல் நினோ" உருவாவதற்குச் சாதகமான நிலைமைகளை உருவாக்குகிறது.
- 2026 ஆம் ஆண்டு மே மற்றும் ஜூலை மாதங்களுக்கு இடையில் எல் நினோ நிலைமைகள் உருவாக 40% நிகழ்தகவு இருப்பதாக ஆராய்ச்சி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.
- ஐரோப்பிய குறுகிய கால வானிலை முன்னறிவிப்பு மையம் இந்த ஆண்டுக்கான ஒரு குறிப்பிட்ட எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது, அதில் பின்வருமாறு கணிக்கப்பட்டுள்ளது:

1) "சூப்பர் எல் நினோ" ஏற்பட 22% வாய்ப்பு.
2) "வலுவான எல் நினோ" ஏற்பட 80% வாய்ப்பு.
3) "மிதமான எல் நினோ" ஏற்படுவதற்கு 98% வாய்ப்பு உள்ளது.

(ii) அறிவியல் வரையறைகள் மற்றும் தாக்க முறைகள்

- எல் நினோ - இது மத்திய மற்றும் கிழக்கு பசிபிக் பெருங்கடலில் மேற்பரப்பு நீர் வெப்பமடைவதால் ஏற்படும் ஒரு காலநிலை நிகழ்வு ஆகும்.
- எல் நினோ ஆண்டுகளில், இந்தியத் துணைக்கண்டம் பொதுவாக வழக்கத்தை விடக் குறைவான அல்லது கணிசமாகப் பற்றாக்குறையான மழையைப் பெறுகிறது.
- இதற்கு நேர்மாறாக, "லா நினா" என்பது பசிபிக் பெருங்கடலின் மேற்பரப்பு குளிர்வதைக் குறிக்கிறது, இது பொதுவாக தெற்காசியாவில் பருவமழை அதிகரிப்பதற்கு வழிவகுக்கிறது.
- 1950 முதல், காலநிலை மாற்றங்களால் இந்தியா 15 வறட்சி ஆண்டுகளைச் சந்தித்துள்ளது; குறிப்பாக, அந்த ஆண்டுகளில் 10 (66%) கடுமையான எல் நினோ நிலைமைகளுடன் ஒத்துப்போயின.

(iii) பொருளாதார மற்றும் விவசாய விளைவுகள்

- மிதமான மற்றும் வலுவான எல் நினோ ஆண்டுகளில், பருவமழையின் அளவு நீண்டகால சராசரியுடன் ஒப்பிடும்போது வரலாற்று ரீதியாக சுமார் 15% குறைந்துள்ளது.
- கடுமையான எல் நினோ ஆண்டுகள், காரிஃப் பயிர் உற்பத்தியில் 6% முதல் 12% வரை குறைவை ஏற்படுத்தக்கூடும்.
- நடப்பு நிதியாண்டில், விவசாய வளர்ச்சி வெறும் 2.4% ஆக இருக்கும் என ஏற்கனவே கணிக்கப்பட்டுள்ளது.
- தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக விவசாய உற்பத்தி மோசமாக இருந்தால், அது உணவு உற்பத்திப் பற்றாக்குறை, உணவுப் பொருட்களின் விலை உயர்வு, மற்றும் கிராமப்புற வேலைவாய்ப்பு மற்றும் வருமானத்தில் சரிவு ஆகியவற்றுக்கு வழிவகுக்கும்.
- ஏற்கனவே சர்வதேச தானிய உற்பத்தி, கப்பல் போக்குவரத்து மற்றும் உர விநியோகத்தைப் பாதித்துள்ள, தொடர்ந்து நிலவும் உலகளாவிய போர்ச் சூழலால் (உதாரணமாக, உக்ரைன்) இந்த அச்சுறுத்தல் தீவிரமடைகிறது.

(iv) அரசாங்கத்தின் உத்தி மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்

- எல் நினோவின் தாக்கங்களைச் சமாளிக்க, அரசாங்கம் பொதுவாக மத்திய கையிருப்புகளில் இருந்து உணவு தானியங்களை வெளியிடுகிறது, ஏற்றுமதிக்குத் தடை விதிக்கிறது, மற்றும் பற்றாக்குறையான விவசாயப் பொருட்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கிறது.
- பருவமழை குறித்த இறுதித் தெளிவு ஏப்ரல் மாதத்தில்தான் தெரியவரும், அப்போது இந்திய வானிலை ஆய்வுத் துறை (IMD) தனது அதிகாரப்பூர்வ முன்னறிவிப்பை வெளியிடும்.
- இந்த எச்சரிக்கைகள் உண்மையானால் இந்தியப் பொருளாதாரம் கடுமையான பின்னடைவுகளைச் சந்திக்கும் என்பதை வலியுறுத்தி, நெருக்கடி வெளிப்படும் வரை காத்திருக்காமல், அரசு இப்போதே விழிப்புடனும் முன்னெச்சரிக்கையாகவும் செயல்பட வேண்டும்.

9. இந்தியா மற்றும் உலகின் ஜனநாயக நிலை குறித்த ஆய்வு.

(i) அரசியலமைப்பு அடிப்படை மற்றும் வரையறைகள்

- இந்திய அரசியலமைப்பின் முகவுரையானது, இந்தியாவை சமூக நீதியை நிலைநாட்டுவதில் உறுதியுடன் கூடிய ஒரு இறையாண்மை, சமதர்ம, மதச்சார்பற்ற, ஜனநாயகக் குடியரசாக வரையறுக்கிறது.
- பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றதிலிருந்து, இந்தியா ஒரு "முழுமையான ஜனநாயக" நாடாகத் திகழ்வதே அதன் அடிப்படை நோக்கமாகும்.
- இந்திய ஜனநாயகத்தை உயிர்ப்புடன் வைத்திருப்பதில் தேர்தல்கள் முதன்மையான பங்கை வகிக்கின்றன; குறிப்பாக, இவ்வளவு பெரிய மக்கள் தொகையைக் கொண்ட ஒரு தேசத்தில் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

(ii) உலகளாவிய கண்காணிப்பு மற்றும் அளவீடுகள் (1946–2006)

- "Economist Intelligence Unit" (EIU) எனும் அமைப்பு 1946-ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கியது; இது உலகளாவிய தேர்தல் செயல்முறைகள், ஊடகச் சுதந்திரம் மற்றும் குடிமக்கள் பங்கேற்பு ஆகியவற்றை ஆய்வு செய்து வருகிறது.
- 2006-ஆம் ஆண்டில், EIU ஆண்டுதோறும் வெளியிடும் "ஜனநாயகக் குறியீட்டை" (Democracy Index) அறிமுகப்படுத்தியது; இது ஜனநாயகப் பண்புகளின் அடிப்படையில் நாடுகளை 0 முதல் 10 வரையிலான அளவுகோலில் தரவரிசைப்படுத்துகிறது.வகைப்பாட்டுப் பிரிவுகள்:

1) 8 முதல் 10 வரை: முழுமையான ஜனநாயகம் (Full Democracy).
2) 6 முதல் 7.9 வரை: குறைபாடுள்ள ஜனநாயகம் (Flawed Democracy).

(iii) இந்தியாவின் புள்ளிவிவர ரீதியான வீழ்ச்சி (2010–2025)

- 2010-ஆம் ஆண்டின் மைல்கல்: இந்தியா முன்னதாக 8.15 என்ற உயர் மதிப்பெண்ணைப் பெற்றிருந்தது; இதன் மூலம் அது "முழுமையான ஜனநாயகம்" என்ற பிரிவில் இடம்பெற்றிருந்தது.
- 2024-ஆம் ஆண்டின் தரவுகள்: இந்தியாவின் மதிப்பெண் 7.81-ஆகக் குறைந்துள்ளது; இதன் மூலம் அதன் ஜனநாயக நிலை அதிகாரப்பூர்வமாக "குறைபாடுள்ள ஜனநாயகம்" என்ற நிலைக்கு மாறியுள்ளது.
- 2025-ஆம் ஆண்டின் உலகளாவிய அறிக்கை: சமீபத்திய அறிக்கை (2024-ஆம் ஆண்டின் தரவுகளின் அடிப்படையில்) தெரிவிப்பதாவது: 167 நாடுகளில், 25 நாடுகள் மட்டுமே முழுமையான ஜனநாயகத்தைக் கொண்டுள்ளன; 46 நாடுகள் குறைபாடுள்ள ஜனநாயகத்தைக் கொண்டுள்ளன.
- பரவலான பின்னடைவு: இந்த வீழ்ச்சியில் இந்தியா மட்டும் விதிவிலக்கல்ல; அமெரிக்கா, பிரான்ஸ், தென் கொரியா, ஸ்பெயின் மற்றும் சிலி போன்ற நாடுகளும் சமீபகாலமாக "முழுமையான ஜனநாயகம்" என்ற நிலையிலிருந்து "குறைபாடுள்ள ஜனநாயகம்" என்ற நிலைக்குப் பின்வாங்கியுள்ளன.

(iv) இந்தியாவின் ஜனநாயகக் குறியீடு வீழ்ச்சியடைவதற்கான காரணங்கள்:

- பேச்சுச் சுதந்திரம் மற்றும் போராட்டம் நடத்தும் உரிமை ஆகியவற்றின் மீதான கட்டுப்பாடுகளும் அச்சுறுத்தல்களும் அதிகரித்திருப்பது.
- மதச்சார்பற்ற அரசியலமைப்பு கட்டமைப்பையும் சிறுபான்மையினரின் உரிமைகளையும் பாதிக்கும் வகையிலான நடவடிக்கைகள்.
- செய்தி நிறுவனங்கள் மீது அதிகரித்து வரும் அழுத்தங்கள்; அத்துடன் தேர்தல் ஆணையம் மற்றும் புலனாய்வு அமைப்புகளின் செயல்பாடு வலுவிழந்து வருவதாகக் கருதப்படுவது.
- அரசு நிர்வாகத்திற்குள் பெருகிவரும் ஊழல் மற்றும் கூட்டாட்சித் தத்துவத்திற்கு (மத்திய-மாநில ஒருங்கிணைப்பு) ஏற்பட்டுள்ள சவால்கள்.

(v) தேர்தல் செல்வாக்கின் மாறிவரும் இயல்பு

- அரசியல் உத்திகள், உணவு மற்றும் உடை போன்ற பாரம்பரியப் பகிர்வுகளிலிருந்து விலகி, பணம், நகைகள் மற்றும் கோயில் காணிக்கைகள் போன்ற அதிக மதிப்புடைய சலுகைகளை வழங்கும் திசையில் மாறியுள்ளன.
- தேர்தலுக்கு ஒன்று அல்லது இரண்டு மாதங்களுக்கு முன்னதாகவே, ஆளும் கட்சிகள் அரசு நிதியைப் பயன்படுத்தி வாக்காளர்களின் வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக ஆயிரக்கணக்கான ரூபாயை வரவு வைக்கும் ஒரு புதிய போக்கு தற்போது உருவாகியுள்ளது; இது ஒரு குறைபாடுடைய ஜனநாயகச் செயல்முறையின் அறிகுறியாகும்.

(vi) ஜனநாயக ஒருமைப்பாடு குறித்த முடிவுரை

- தேர்தல்களை நடத்துவது மட்டுமே முழுமையான ஜனநாயகத்திற்கு உத்தரவாதம் அளித்துவிடாது; அதற்கு நியாயமான செயல்முறைகள், அனைத்துக் கட்சிகளுக்கும் சமமான வாய்ப்புகள் மற்றும் ஒரு சுதந்திரமான ஊடகம் ஆகியவை அவசியமாகும்.
- ஜனநாயகத்தின் நிலைத்தன்மையும் பிழைத்திருத்தலும், தேர்தல் ஆணையம், நீதித்துறை மற்றும் ஊடகம் ஆகிய அமைப்புகள் தங்கள் கடமைகளை எவ்வித் பாரபட்சமுமின்றி நிறைவேற்றுவதையே பெரிதும் சார்ந்திருக்கின்றன